பக்கங்கள் 14 + 2

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 03 திங்கட்கிழமை 18.11.2024 அதிர்வு 109

## தேசியப் பட்டியல் மூலம் எம்.பி. ஆகின்றார் ரவி



இம்முறை நாடாளு மன்றத் தேர்தலில் காஸ் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட புதிய ஜன நாயக முன்னணி 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# புதிய அமைச்சரவை இன்று பதவியேற்பு

## பாதுகாப்பு, நிதி, பொருளாதாரம் ஜனாதிபதி வசம்

தேசிய மக்கள் சக்தி அரசின் புதிய அமைச்சரவை இன்று திங்கட்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டது.

புதிய அமைச்சரவை 21 பேருக்கு மட்டுப்படுத்தப்படுவதோடு பாதுகாப்பு, நிதி, திட்டமிடல், பொருளாதார அபிவிருத்தி, டிஜிட்டல் பொருளாதாரம் ஆகிய அமைச்சுக்கள் ஜனாதிபதியின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ளன.

புதிய அரசின் பிரதமராக கலாநிதி ஹரிணி அமரசூரிய பதவிப் பிரமாணம் செய்துகொண்டதுடன் புதிய அமைச்சரவை சத்தியப்பிரமாணம் செய்துகொண்டது.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் பின்வருமாறு:- 02



## கடற்றொழில் அமைச்சராக சந்திரசேகர் பதவிப்பிரமாணம்

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சராக இராமலிங்கம் சந்திரசேகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய அமைச்சரவை பதவியேற்பு நிகழ்வு 02

## மலையக அரசியல் வரலாற்றில் முதல் தமிழ்ப் பெண் அமைச்சர்

### மகளிர், சிறுவர் விவகாரம் சரோஜா வசம்

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சராக சரோஜா சாவித்திரி போல்ராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய அமைச்சரவை பதவியேற்பு நிகழ்வு 02



# 2 ஆசிரியைகளால் தாக்கப்பட்ட பாடசாலை மாணவி உயிரிழப்பு!



(எம்.எச்எம். சியாஜ்)

வென்னப்புவ பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் இரண்டு ஆசிரியைகளால் தாக்கப்பட்டமையால் பாதிக்கப்பட்டனர் எனக் கூறப்படும் பாடசாலை மாணவி ஒருவர் மூன்று மாதங்களுக்கு மேலாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார்.

இதன்படி, சம்பவம் தொடர்பில் பிணையில் விடுவிக்கப்பட்ட இரண்டு ஆசிரியைகளும் மீண்டும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்

வென்னப்புவ பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் தரம் 10 இல் கல்வி கற்று வந்த மேற்படி மாணவி, வகுப்பு ஆசிரியை மற்றும் மற்றுமொரு ஆசிரியையால் தாக்கப்பட்டதையடுத்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

வகுப்பறையை விட்டு வேறொரு மாணவியுடன் வெளியேறியமை தொடர்பில் மேற்படி மாணவி இவ்வாறு தண்டிக்கப்பட்டிருந்தார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளின் பின்னர், சந்தேகநபர்களான இரண்டு ஆசிரியைகளும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுக் கடந்த செப்டெம்பர் 13 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இந்தநிலையில், ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மேற்படி மாணவி சிகிச்சை பலனின்றி அண்மையில் உயிரிழந்தார்.

இதையடுத்து, இரண்டு ஆசிரியைகளும் மீண்டும் கைது செய்யப்பட்டனர்.

---

## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

01. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க – பாதுகாப்பு, நிதி, திட்டமிடல், பொருளாதார அபிவிருத்தி, டிஜிட்டல் பொருளாதார அமைச்சர்

02. பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய – கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சர்

03. விஜித ஹேரத் – வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர்

04. பேராசிரியர் சந்தன அபேரத்ன – பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

05. சட்டத்தரணி ஹர்சன நாணயக்கார – நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர்

06. சரோஜா சாவித்ரி போல்ராஜ் – மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர்

07. கே.டி லால் காந்த – விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்

08. அநுர கருணாதிலக – நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர்

09. இராமலிங்கம் சந்திரசேகர் – கடற்றொழில் மற்றும் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர்

10.பேராசிரியர் உபாலி பன்னிலகே – கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர்

11. சுனில் ஹந்துன்னெத்தி – கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்

12. ஆனந்த விஜேபால – பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர்

13. பிமல் ரத்நாயக்க – போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானத்துறை அமைச்சர்

14. பேராசிரியர் ஹினிதும சுனில் செனவி – புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

15. வைத்தியர் நளிந்த ஜெயதிஸ்ஸ – சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர்

16. சமந்த வித்யாரத்ன – பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர்

17. சுனில் குமார கமகே – இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

18. வசந்த சமரசிங்க – வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர்

19. பேராசிரியர் கிரிசாந்த அபேசேன – விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சர்

20. பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ – தொழில் அமைச்சர்

21. பொறியியலாளர் குமார ஜயகொடி – வலுசக்தி அமைச்சர்

22. வைத்தியர் தம்மிக பட்டபெந்தி – சுற்றாடல் அமைச்சர்

இந்த நிகழ்வில் ஜனாதிபதி செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவும் கலந்துகொண்டார்.

---

## மலையக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் இன்று நடைபெற்றது.

இதன்போதே அமைச்சராக சரோஜா சாவித்ரி போல்ராஜ், ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

மலையக அரசியல் வரலாற்றில் முதலாவது தமிழ்ப் பெண் அமைச்சர் என்ற பெருமையை இதன்மூலம் அவர் பெற்றார்.

---

## கடற்றொழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் இன்று நடைபெற்றது.

இதன் போதே அமைச்சராக இராமலிங்கம் சந்திரசேகர் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டார்.

---

## தேசியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனது தேசியப் பட்டியல் உறுப்பினர் விபரத்தை அறிவித்துள்ளது.

அதனடிப்படையில் ரவி கருணாநாயக்கவைத் தேசியப் பட்டியல் உறுப்பினராக நியமித்துள்ளதாக அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

2024 நாடாளுமன்றத் தேர்தல் பெறுபேறுகளின்படி புதிய ஜனநாயக முன்னணி இரண்டு தேசியப் பட்டியல் உறுப்பினர்களைப் பெற்றுக்கொண்ட நிலையில், அவர்களில் ஒருவராக ரவி கருணாநாயக்கவின் பெயர் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

# அநுர அரசை வாழ்த்துகின்றேன்

# தமிழ்ப் பிரதிநிதித்துவம் இல்லாமல்போனதால் மனம் வருந்துகின்றேன்

## விசேட அறிக்கையில் மனோ தெரிவிப்பு



"நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்து விட்டது. வெற்றி பெற்ற அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்கள். ஆட்சி அமைக்கும் அநுரகுமார திஸாநாயக்க அரசுக்கும் எனது வாழ்த்துக்கள்."

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் இன்று திங்கட்கிழமை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாது:-

"நாட்டின் தேசிய தீர்மானங்கள் எடுக்கப்படுகின்ற கொழும்பு தலைநகர் மாவட்டத்தில், தமிழர் பிரதிநிதித்துவத்தை இரட்டிப்பு ஆக்க நமது கட்சி எடுத்துக் கொண்ட முயற்சி வெற்றி பெறவில்லை. இன்று இருந்த ஒரு தமிழர் பிரதிநிதித்துவமும் இல்லாமல் போய் விட்டது. இதையிட்டு நான் மன வருத்தம் அடைகின்றேன்.

எனினும், கொழும்பு தலைநகர் மாவட்டத்தில் இருந்த தமது இரண்டு பிரதிநிதித்துவங்களைத் தக்க வைத்து கொண்டு, இன்று அதை மூன்றாகவும் அதிகரித்துக் கொண்ட, சகோதர தமிழ் பேசும் முஸ்லிம் உடன் பிறப்புகளை எண்ணி மகிழ்ச்சி அடைகின்றேன்.

அடித்துள்ள அரசியல் அலையின் மத்தியிலும் நாடெங்கும் மக்கள், எமது வேட்பாளர்கள் போட்டியிட்ட ஏழு மாவட்டங்களில் 2 இலட்சத்து 37 ஆயிரத்து 123 விருப்பு வாக்குகளை எமது வாக்காளர்கள், தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு வழங்கி உள்ளார்கள். அவர்களுக்கு விசேட நன்றிகள்.

பல இனங்கள் வாழும் ஒரு நாட்டில் ஒவ்வொரு இனமும் தமது பிரதிநிதித்துவத்தைத் தக்க வைத்துக்கொள்வது, அதிகரிப்பது, இயல்பான ஜனநாயக உரிமை செயற்பாடுகளாகும். ஆனால், கொழும்பு தலைநகர் மாவட்ட தமிழர் பிரதிநிதித்துவம் தொடர்பில் அது இன்று சாத்தியப்படவில்லை. இதைக் கண்டு மன வருத்தம் அடைகின்றேன்.

2010 ஆம் ஆண்டு கண்டி மாவட்டத்தில் தமிழர் பிரதிநிதித்துவத்தைப் பெற ஒரு கட்சித் தலைவராக மேற்கொண்ட முயற்சியின்போது, இத்தகைய ஒரு வெற்றி அடையாத சூழலை நான் எதிர்கொண்டேன். பின்னர் நான் சாம்பலில் இருந்து எழுந்து வந்தேன். அது வரலாறு. ஆனால், அப்படிப் போராடி பெற்ற கண்டி மாவட்ட தமிழ் பிரதிநிதித்துவமும் இன்று இல்லாமல் போயுள்ளது. அதையிட்டும் நான் கவலை அடைகின்றேன்.

நடந்து முடிந்த தேர்தலில் கட்சியின் சக கொழும்பு மாவட்ட புதிய வேட்பாளர் தம்பி லோஷன் புதிய அனுபவங்கள் பலவற்றைக் கற்று கொண்டார். கடும் முயற்சியாளர், சமூக பற்றாளரான அவருக்கு எனது பாராட்டுகள். அவரது எதிர்காலம் சிறப்பாக அமையும்.

கடும் அரசியல் அலையின் மத்தியில், தமிழ் வாக்காளர் சிறுபான்மையாக வாழும் ஏனைய இரத்தினபுரி, கேகாலை, கண்டி, பதுளை, கம்பஹா ஆகிய மாவட்டங்களில் போட்டியிட்ட எமது வேட்பாளர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகள்.

கொழும்பு தலைநகர் மாவட்டத்தில், இருந்த தமது இரண்டு பிரதிநிதித்துவங்களை தக்க வைத்து கொண்டு, இன்று அதை மூன்றாக அதிகரித்தும் கொண்ட, தமிழ் பேசும் சகோதர முஸ்லிம் உடன்பிறப்புகளுக்கு எனது இதய பூர்வ பாராட்டுகள்." – என்றுள்ளது.

# காட்டு யானை தாக்கியதில் கோமாரியில் குடும்பஸ்தர் பலி!



(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் பொத்துவிலை அடுத்துள்ள கோமாரிப் பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி 46 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார் .

மூன்று பிள்ளைகளின் தந்தையான விவசாயி ஜெயரட்ணம் நவநேசன் (வயது 46) என்பவரே இவ்வாறு பலியானவராவார்.

இந்தச் சம்பவம் நேற்று (18) திங்கட் கிழமை அதிகாலை ஒரு மணியளவில் கோமாரி காட்டுவெளி பூனைப் போக்குப் பகுதியில் இடம்பெற்றது .

வயல் காவலுக்காக சென்ற விவசா யியான இவரது பிரேதம் பொத்துவில் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

அடிக்கடி கோமாரி பிரதேசத்தில் காட்டு யானை தாக்குதலில் மனிதர்கள் பலியாகி வருவது வழமையாகிவிட்டது.

# தேர்தல் காலங்களில் கையூட்டுகள் வழங்கும் கலாசாரம் ஒழிக்கப்பட வேண்டியது அவசியம்

## நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெவ்வை தெரிவிப்பு

(எம்.ஏ.றமீஸ்)

தேர்தல் காலங்களில் மக்களுக்கு பணத்தையும் பொதிகளையும் வழங்கித் தமக்கான வாக்குகளை வற்புறுத்தலின் கீழ் பெற்றுக் கொள்ளும் கலாசாரம் இனிவரும் காலங்களில் மாற்றியமைக் கப்பட வேண்டும். அவ்வாறு செயற்பட்ட வர்கள் எமது மாவட்ட மக்களால் இம் முறை நிராகரிக்கப்பட்டுள்ளனர்.

அது மாத்திரமன்றி எமது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை இந்தத் தேர்தலில் தோல்வியடையச் செய்ய வேண்டும் என கட்சிக்குள்ளும் கட்சிக்கு வெளியேயும் இருந்து செயற்பட்டவர்க ளும் இந்தத் தேர்தலில் தோல்விய டைந்துள்ளனர்.

இவ்வாறு திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் போட்டியிட்டு அந்தக் கட்சியின் மூலம் இந்த மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஒரே ஒரு நாடா ளுமன்ற உறுப்பினரான எம்.எஸ். உதுமாலெவ்வை தெரிவித்தார்.

தேர்தல் வெற்றியின் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று (17) மாலை அட்டாளைச்சேனை யில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்த முறை நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது பலர் தமது பண பலத் துடன் அம்பாறை மாவட்டத்தில் போட்டி யிட்டனர். அவர்களுள் பெரும்பாலா னோர் தமது வெற்றிக்காக பெருந் தொகை பணத்தையும், பல்வேறு பொருள்கள் அடங்கிய பொதிகளையும் மக்களுக்காக வழங்க முற்பட்டனர்.



அவ்வாறு செயற்பட்டவர்களுக்கு இந்த மாவட்ட மக்கள் தக்க பாடம் புகட்டி யிருக்கின்றார்கள். அவர்களில் எவருமே இத்தேர்தலில் வெற்றி பெறவில்லை.

எமது கட்சியையும், கட்சித் தலைமை யையும் தோல்வியடையச் செய்ய வேண் டும் என கட்சிக்குள்ளிருந்தும், கட்சிக்கு வெளியில் இருந்தும் பலர் செயற்பட்ட னர். அவர்களது கனவு இத்தேர்தலில் பலிக்கவில்லை. மறைந்த பெருந்தலை வர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரஃப் இந் தக் கட்சியை ஆரம்பித்தபோது இந்தக் கட்சியில் நாம் இணைந்து செயற்பட்ட வர்கள். கட்சிக்காக பல்வேறு தியாகங் களை நாம் மேற்கொண்டிருக்கின்றோம். எமது தூய எண்ணத்துக்கும், எமது தியாகத்துக்கும் கிடைத்த வெற்றியாகவே நாம் இவ்வெற்றியைப் பார்க்கின்றோம்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினராக இருந்தால் அவர் கட்சிக்கும் சமூகத்துக்கும் விசு வாசம் உடையவராக இருக்க வேண்டும். கட்சிக்கும் சமூகத்துக்கும் புறம்பாக செயற்பட்டவர்களையும், ஜனாஸா எரிப்பின்போது சுயநலத்துக்காகச் செயற்பட்டவர்களையும் இத்தேர்தலின் போது மக்கள் பாடம் புகட்டி நிராகரித் துள்ளனர்.

தற்போது கிடைக்கப் பெற்ற எனது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் மூலம் எதிர்வரும் ஐந்தாண்டுகளுக்கு இன, மத பேதமின்றி செயற்பட எண்ணியுள் ளேன். நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் இன்றி காணப்படும் பிரதேசங்களுக்கு மிகுந்த கரிசனையுடன் எனது சேவையை மேற்கொள்ளவுள்ளேன்.

எமது கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்களும், கருத்து முரண்பாடுக ளுடன் கட்சியை விட்டுத் தூரமானவர் களும், ஏனைய கட்சியைச் சேர்ந்தவர்க ளும் ஒற்றுமைப்பட்டு எமது சமூகத்தின் நலனுக்காகச் செயற்பட வேண்டியுள் ளது. அதற்காக அனைவரும் ஒன்றுபட்டு முஸ்லிம்களின் பாரிய சக்தியாக குரல் கொடுக்க முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்த வேண்டியிருக்கின்றது.

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மூவின சமூகத்தவர்களும் செறிந்து வாழும் பகுதியாகும். இங் குள்ள ஒவ்வொரு சமூகத்தினருக்கும் பல்வேறான பிரச்சினைகள் காணப் படுகின்றன. அவ்வாறான பிரச்சினை களைப் பேச்சுவார்த்தையின் அடிப்படை யில் தீர்த்து வைக்க முன்னின்று செயற் பட வேண்டும். எம்மிடையே உள்ள முரண்பாடுகள் களையப்பட்டு நிரந்தர தீர்வை ஒற்றுமையோடு பெற்றுக் கொள் ளக் கூடியவர்களாக நாம் அனைவரும் மாற வேண்டும்.

இந்தத் தேர்தலில் என்னை வேட்பா ளராகக் களமிறக்கிய கட்சிக்கும், கட்சி யின் தலைமை உள்ளிட்ட கட்சியின் அனைத்து தரப்பினருக்கும், கட்சியின் போராளிகள், பொது மக்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் இதய சுத்தியுடனான நன்றியறிதலை தெரிவித் துக் கொள்கின்றேன்.- என்றார்.

# திருகோணமலையில் வியாழனன்று கிழக்கு மாகாண இலக்கிய விழா!

(வி.ரி. சகாதேவராஜா)

கிழக்கு மாகாணத்தில் 2024 ஆம் ஆண்டுக்கான கிழக்கு மாகாண இலக்கிய விழா எதிர்வரும் 21 ஆம் தேதி வியாழக்கிழமை திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

கடந்த மூன்று வருடங்களாக விருது பெறும் கலைஞர்களின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர் என்று கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப் பாளர் சரவணமுத்து நவநீதன் தெரிவித்தார்.

திருகோணமலை உவர்மலை விவேகானந்த கல்லூ ரியில் காலை 10 மணிக்கு நடைபெறவிருக்கும் இந்த விழாவுக்குப் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் கலந்து கொள்ளவுள்ளார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் 2024 ஆம் ஆண்டில் நடத்தப்படவுள்ள இலக்கிய விழாவில் விருதுகள் வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள



கலைஞர்களுக்கு இது தொடர்பாக அந்தந்த கலாசார உத்தியோகத்தர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.



# அக்கரைப்பற்று முஸ்லிம் மத்தியின் புதிய அதிபருக்கு நினைவுச்சின்னம்

(றிஸ்வான் சாலிஹூ)

ஐகோனின் யூத்ஸ் ஸ்ரீலங்கா அமைப்பின் செயற்றிட்டங்களின் ஒன்றான அரச மற்றும் பொது நிறுவனங்களில் புதிதாக நியமிக்கப்படும் தலைவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வின் அடிப்படையில் அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) அண்மையில் நியமிக்கப்பட்ட, இந்தப் பாடசாலையின் முதலாவது பெண் அதிபரான ஏ.எல்.நஸீபா இக்பாலைப் பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கும் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை (17) கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அதிபர் திருமதி நஸீபா உரையாற்றுகையில்,

இந்தக் காலகட்டத்தில் பெற்றோர்களை மதிக்காமலும், ஆசிரியர்களின் சொல் கேட்காத மாணவர்கள் இளைஞர்களுக்கு மத்தியில் இந்த இளைஞர் அமைப்பினரின் செயற்பாடுகளை அவதானிக்கும் போது பெரும் சந்தோஷமாக உள்ளது. இவர்கள் தான் எதிர் காலத்தில் இந்தச் சமூகத்துக்காக உதவக்கூடியவர்களாக முன்வருவார்கள் என்பதில் ஐயமில்லை.

பாடசாலையின் கல்வி வளர்ச்சி உட்பட்ட சகல ஏனைய தேவைகளிலும் பாடசாலையோடு இணைந்து செயற்படுவதற்கு உங்களை மனம் திறந்து அழைக்கின்றேன். பாடசாலையின் வெற்றி பாதையில் உங்களது பங்களிப்பும் இருக்க வேண்டும். இந்த நல்லதொரு நிகழ்வை ஏற்பாடு செய்து என்னை கௌரவித்தமைக்காக உங்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.- என்றார்.

இந்த நிகழ்வில் அமைப்பின் செயலாளர், தவிசாளர், அமைப்பாளர், ஆலோசனை சபை உறுப்பினர்கள், அங்கத்தவர்கள் மற்றும் பாடசாலையின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.





# கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் சாதனையாளர், பெற்றோர் கௌரவிப்பு!

(மாளிகைக்காடு)

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) 2023 (2024) க.பொ.த. உயர்தர பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவிகள், சாதாரண தர பரீட்சைகளில் அதி விசேட சித்தி பெற்ற (9ஏ, 8ஏ,பி, 8ஏ,சி) மாணவிகள், இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாகாண, தேசிய, சர்வதேச ரீதியாக திறமைகளை வெளிப்படுத்திய மகத்தான மாணவிகள், அவர்களின் பெற்றோர்கள் ஆகியோரைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழா கல்லூரியின் முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் தலைமையில் சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுத்துல் நஜீம், கௌரவ அதிதியாக இந்தக் கல்லூரியின் முதல் வைத்திய கலாநிதி திருமதி மர்சுக்கா உவைஸ், விசேட அதிதிகளாக கல்முனை கோட்டக்கல்வி பணிப்பாளர் யூ.எல். றியால், சாய்ந்தமருது கோட்டக் கல்வி பணிப்பாளர் திருமதி. எம்.எம். மலிக் அஸ்மா ஆகியோர் கலந்து கொண்டனர்.

கிழக்கிலங்கை முஸ்லிம் பெண்களின் கல்வி வளர்ச்சியில் ஒரு விடிவெள்ளியாக திகழும் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி 54 ஆண்டுகள் வரலாற்றில் இந்த நாட்டிலுள்ள முஸ்லிம் சமூகத்தின் கல்வி எழுச்சி, விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தி வருகின்றது.

2023 (2024) இல் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி உயிரியல் விஞ்ஞான பீடத்துக்குத் தெரிவான (34) மாணவிகள், பிரயோக விஞ்ஞான தெரிவான (05) மாணவிகள், உயிர் முறைமை தொழினுட்ப தெரிவான (09) மாணவிகள், கலைப் பிரிவுக்கு தெரிவான (54) மாணவிகள், வர்த்தக பிரிவுக்கு தெரிவான (14) மாணவிகளுக்கும், 2023 (2024) இல் இம்முறை க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் 100 வலயங்களில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியானது இரண்டாம் இடத்தைப் பெறுவதற்கு ஏதுவாக இருந்த 9ஏ பெற்ற (26) மாணவர்கள், 8ஏபி, 8ஏசி (33) பெற்ற மாணவிகள் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் மாகாண, தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் வெற்றி பெற்று சாதனை படைத்த அனைத்து மாணவிகளுக்கும் அவர்களின் பெற்றோர்களின் பங்கேற்புடன் பதக்கங்கள், சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டன.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நீதியாகச் செயற்படுக!

எதிர்க்கட்சிகள் தரப்பில் அமர்ந்து கொண்டு ஆளும் தரப்பை - அரசாங்கத்தை - அரசு நிர்வாகத்தை - நிர்வாக முறைமையை - விமர்சிப்பதும், குறை கூறுவதும், கண்டிப்பதும் எல்லாம் இலகுவான விடயங்கள். ஒரு வகையில் அவை வாய்ச்சவடால் நடவடிக்கைகள்தான்.

அதே அரசாங்கத்தை - அதே நிர்வாகத்தை - அதே ஆட்சியை - பொறுப்பெடுத்து, ஊழல், மோசடி, லஞ்ச லாவண்யம், நிர்வாக சீர்கேடு போன்றவை இல்லாமல் முன் கொண்டு செல்வது இமாலய இலக்காகும்.

புதிய அரசைப் பொறுப்பேற்றிருக்கும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி இதுவரை காலமும் நாடாளுமன்றத்தில் மூன்றே மூன்று உறுப்பினர்களை மட்டும் வைத்துக்கொண்டு ஆளும் தரப்பை - ஆட்சியாளர்களை - அரசுத் தலைவர்களை - தாறுமாறாக விமர்சிப்பதில் வெற்றி வீரர்களாகத் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டார்கள்.

இப்போது ஆட்சி அதிகாரம் அவர்கள் கையில். அதுவும் அரைகுறை அதிகாரம் அல்ல. தேவைக்கு மிதமிஞ்சிய அளவு ஆணை மற்றும் பிரதிநிதித்துவத்துடன் அந்த வலிமையை மக்கள் தேசிய மக்கள் சக்திக்கும் அதன் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவிற்கும் வழங்கி இருக்கிறார்கள்.

முன்னர் தாம் விமர்சித்தமை போன்ற தல்லாத ஒரு நல்லாட்சி அரச முறைமையை அவர் நடத்திக் காட்ட வேண்டும்.

எப்போதும் 'கணக்குப்பிள்ளை பேசக் கூடாது, கணக்குப் புத்தகம் பேச வேண்டும்' என்று சொல்லுவார்கள். அரசு நிர்வாக விடயத்திலும் விவகாரங்கள் வாய்ப்பேச்சில் இருக்கக் கூடாது. செயலில் செய்து காட்டப்பட வேண்டும்.

அரசு நிர்வாகம் ஒழுங்காக - நிர்வாகச் சீர்கேடுகள், மோசடிகள், குழப்பமின்றி நேர்மையாக நடத்தப்படுவதை உறுதிப்படுத்துவது நாடாளுமன்றத்தின் பொது நிறுவனங்களின் குழு (கோப்) மற்றும் பொது கணக்கு குழு (பி.எஸ்.ஸி.) ஆகியவை ஆகும்.

அவைதான் ஆட்சி நிர்வாகத்தின் ஒழுக்கத்தைக் கண்காணித்து பேண வேண்டிய 'காவல் நாய்கள்'.

அவை சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் அதிக கண்காணிப்புடனும் செயற்பட்டால் அரசாங்கத்தின் நிர்வாகம் ஒழுங்கு முறைப்படி நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்ய முடியும் என்று முன்னாள் நாடாளுமன்ற நிர்வாகத்துக்குப் பொறுப்பான இயக்குனர் லெஸ்லி டீ சில்வா சுட்டிக்காட்டி இருக்கிறார்.

முன்னைய அரசுகள் இந்த இரண்டு காவல் நாய்ப் பணிப் பொறுப்புக் கொண்ட அதிகாரக் குழுக்களுக்கு தங்கள் அரசு சார்பான இருவரை தலைவர்களாக நியமித்துக் கொண்டு, அதன்மூலம் அரசு நிர்வாகத்தை கண்காணித்து நெறிப்படுத்தும் இந்த குழுக்களின் பணிகளை பங்கப்படுத்தி, மலினப்படுத்தி நின்றன.

அதனால்தான், சீர்கெட்டு, மோசமடைந்து போன அரசு நிர்வாகத்தை சரியாகக் கண்காணித்து, உரிய நடவடிக்கைகளை உரிய காலத்தில் எடுத்து, ஒழுங்குபடுத்த முடியாமல் போயிற்று.

நாட்டின் பொருளாதார நிலைமை அதல பாதாளத்துக்குள் விழுந்தமைக்கு இத்தகைய அதிகாரம் கொண்ட முக்கிய நாடாளுமன்றக் குழுக்களுக்கு அரசு சார்பில் தலையாட்டி பொம்மைகளை தலைவர்களாக நியமித்து, அதன் மூலம் அக்குழுக்களின் பிரதான கண்காணிப்பு பணியைப் பின்னடையச் செய்தமை முக்கிய காரணம் என்பது எல்லோருக்கும் தெரியும்.

நிர்வாகத்தை நேர்மையாகவும், ஒழுங்காகவும், நேர்சீராகவும், வெளிப்படைத் தன்மையுடனும் நடத்தப் போவதாகக் கூறி ஆட்சிக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தி தன்னுடைய நிர்வாகமும் ஆட்சி முறைமையும் நேர்மையாகவும் ஒழுங்காகவும் இருக்குமானால் இந்த நாடாளுமன்றக்குழுக்களின் கண்காணிப்பு பணி சுயாதீனமாகவும் புற அழுத்தங்கள் ஏதுமின்றியும் இயங்குவதை முதலில் உறுதிப்படுத்த வேண்டும்.

நீதி நிலைநாட்டப்படுவது மட்டுமல்ல, நிலை நாட்டப்படுவது போல காட்டப்பட வேண்டும். அந்த வகையில் பார்த்தால் இந்த இரண்டு நாடாளுமன்ற குழுக்களும் முன்னைய அரசுகளின் காலத்தில் செயற்பட்டமை போன்று அல்லாமல் இப்போது சுயாதீனமாக - சுதந்திரமாக - நேர்மையாக செயல்பட்டு, அரசு நிர்வாகத்தை கண்காணிக்கின்றன என்ற நம்பிக்கையை மக்களுக்கு ஏற்படுத்தும் விதத்தில், அந்த இரண்டு குழுக்களின் தலைமைப் பதவியையும் எதிர்க்கட்சித் தரப்பில் காத்திரமான - தகுதி உடைய - விடயங்களைக் கையாளும் தகைமை கொண்ட - பிரமுகர்களிடம் ஒப்படைப்பதற்கு அரசாங்கம் இணங்க வேண்டும்.

அரசாங்கத்தின் - ஆட்சித் தரப்பின் - நிர்வாக நடவடிக்கைகளையும், ஒழுங்கு முறைகளையும், ஊழலற்ற செயற்பாடுகளையும் கண்காணித்து சான்றிதழ் அளிக்கும் பணியை அரசு சார்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஒப்படைக்காமல், எதிரணியில் தகுதி பெற்ற தரப்புகளிடம் அதை வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டும். அரசு முன்வருமா?





# குகதாசன் எம்.பிக்கு வரவேற்பு



**(ஹஸ்பர்)**

திருகோணமலை மாவட்டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவான சண்முகம் குகதாசன் திருகோணமலை சல்லி பகுதிக்கு நேற்று முன்தினம் (16) விஜயம் மேற்கொண்டார்.

இந்தப் பகுதி மக்கள் அமோக வரவேற்பளித்ததுடன் இதன் போது வாக்களித்த மக்களுக்காக சண்முகம் குகதாசன் நன்றிகளையும் தெரிவித்து கொண்டார்.






# காத்தான்குடியில் கத்திக் குத்து!

## விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்பு நடவடிக்கை

(கனகராசா சரவணன்)

காத்தான்குடி றிஸ்வி நகரில் றஸ்மீ குழு கட்சி ஆதரவாளர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தியதில் அவர் படுகாய மடைந்தநிலையில்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் நடத்திய குழு தப்பி ஓடியுள் ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் நேற்று முன்தினம் சனிக் கிழமை (16) இரவு இடம்பெற்றுள்ளது.

இதனால் அந்தப் பகுதில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இதனை அடுத்து விசேட அதிரடிப் படையினர் பலத்த பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடு பட்டுள்ளனர்.

காத்தான்குடியில் ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சி அலுவலகம் கடந்த 6 ஆம் திகதி உடைக்கப்பட்ட சம்பவத்தையடுத்து புதிய ஜனநாயக முன்னணி கட்சி ஆதரவாளர்களுக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

இதனையடுத்து கடந்த 14 ஆம் திகதி இரு கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட சண்டையை அடுத்து புதிய ஜனநாயக முன்னணி கட்சியைச் சேர்ந்த இருவரை பொலிஸார் கைது செய்தனர்.

இதனை தொடர்ந்து சம்பவதினமான நேற்று முன்தினம் இரவு 7.30 மணி யளவில் றிஸ்வி நகரில் வீட்டின் முன் னால் நின்று கொண்டிருந்த ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சி ஆதரவாளர் மீது, அங்கு பொல்லுகள் வாள்கள் மற்றும் கத்தி கூரிய ஆயுதங்களுடன் சென்ற றமீஸ் குழுவினர் கத்தியால் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

அவர் படுகாயமடைந்ததையடுத்து அந்த குழுவினர் அங்கிருந்து தப்பி ஓடியுள்ளனர்.

இதனை அடுத்து தாக்குதலில் படு காயமடைந்தவரை காத்தான்குடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தை அடுத்து அந்த பகுதியில் பெரும் பதற் றம் ஏற்பட்டது. அங்கு விசேட அதிரடிப படையினர் அழைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இந்த சம்பவத்தையடுத்து அங்கு தேர்தல் கண்காணிப்பு குழுவான கபே அமைப்பு சென்று கண்காணித்துள்ளது. இது தொடர்பாக மேலதிக விசாரணை களை பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.



# கைதடியில் மரநடுகை!

(த.சுபேசன்)

'விதைப்பதும் முளைப்பதும் கார்த்திகையில்' என்ற தொனிப்பொருளில் பசுந்தேசம் அமைப்பும் இயற்கையின் நண்பர்கள் அமைப்பும் இணைந்து மரநடுகைச் செயற்திட்டத்தை முன் னெடுத்து வருகின்றன.

அதன் ஓர் அங்கமாக நேற்று ஞாயிற் றுக்கிழமை கைதடி ஆயுள்வேத போதனா மருத்துவமனை முன்றலில் மரக்கன்றுகள் நட்டு வைக்கப்பட்டன.

மரநடுகை நிகழ்வில் கைதடி மகளிர் அமைப் புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட னர்.






# மண்முனை வடக்குப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தினரின் சிரமதானம்!

(பழுவூரான்)

மண்முனை வடக்குப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத் தலைவி சுஜீவாவின் தலைமையில் கல்லடி கடற்கரையோரம் மற்றும் திருச்செந்தூர் கோவில் வரையிலான பகுதிகளில் "பிளாஸ்டிக் பாவனையை குறைப்போம்" எனும் தொனிப்பொருளில் சிரமதானப்பணி நேற்று ஞாயிற்றுக் கிழமை (17) முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கான பங்களிப்பை ஜனாதக்ஷன் அமைப்பு வழங்கியிருந்தது.



இந்தச் சிரமதானப் பணியில் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் திருமதி நிஷாந்தினி அருள்மொழி, மட்டக்களப்பு மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர் மாணிக்கப்போடி சசிகுமார், மண்முனை வடக்குப் பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் எஸ்.தயாசீலன், ஜனாதக்ஷன் அமைப்பின் கள உத்தியோகத்தர் பெலிஸ்ட்டா மதுவந்தி, இயற்கைமொழி அமைப்பின் ஸ்தாபகர் திருமதி காயத்ரி, மண்முனை வடக்குப் பிரதேச செயலக சுற்றுச் சூழலியல் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பிரசாந்தினி உட்பட மண்முனை வடக்குப் பிரதேச சம்மேளன உறுப்பினர்களென 45 இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டு தங்களது பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

# தேசியப் பட்டியலில் தெரிவான ஆதம்பாவாவுக்கு வரவேற்பு!

(வி.ரி.சகாதேவராஜா)

தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக கல்முனை சாய்ந்தமருதைச் சேர்ந்த பட்டதாரி ஆசிரியர் அபூபக்கர் ஆதம்பாவா தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்.

அவருக்கு, அவர் பிறந்த சாய்ந்தமருதில் நேற்று இரவு பெரு வரவேற்பளிக்கப்பட்டது.

தேசிய மக்கள் சக்தி தேசிய பட்டியலில் பட்டியலில் இடம் பிடித்த ஒரே ஒரு முஸ்லிம் வேட்பாளர் ஆதம்பாவா என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது தெரிவுடன் அம்பாறை மாவட்டத்தில் 3 முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகி இருக்கின்றார்கள்.

இம்முறை தேர்தலில் போட்டியிட்டு 23, 075 வாக்குகளை பெற்று ஏழாவது நிலையில் நாடாளுமன்ற வாய்ப்பைத் தவறவிட்டிருந்தார். இருந்த போதிலும் அவருக்கு தேசிய பட்டியல் ஆசனத்தை அநுர அரசு கட்சி வழங்கியுள்ளது.

இவர் கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையில் உயிரியல் பட்டதாரி ஆசிரியராவார்.

EVEREST
FURNITURE
MODERN FURNITURE FOR YOUR HOME

(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA





# சாய்ந்தமருது மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம்!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி திசைகாட்டி சார்பாக திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிட்ட அபூபக்கர் ஆதம்பாவா 23,075 வாக்குகளைப் பெற்றார்.

தேசிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் செல்லும் உறுப்பினர்களின் பெயர் பட்டியலை தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

அதன் அடிப்படையில் தேசியப் பட்டியல் ஊடாக அவரது பெயர் தெரிவு செய்யப்பட்டமையைக் கொண்டாடும் முகமாக நேற்று ஞாயிற்றுக்கிழமை (17) இரவு சாய்ந்தமருதில் பிரதான வீதி எங்கும் பட்டாசு கொழுத்தி மக்கள் சந்தோஷ ஆரவாரத்துடன் ஈடுபட்டனர்.

தேசியப்பட்டியல் மூலமாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அபூபக்கர் ஆதம்பாவா, தனது ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலயம் மற்றும் கல்முனை சாஹிறாக் கல்லூரியிலும் கற்று, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் உயிரியல் இளங்கலை பட்டம் பெற்றார்.

கல்வியில் முதுகலை பட்டதாரி மற்றும் அனர்த்த முகாமைத்துவம் சம்பந்தமான பட்டம் பெற்றுள்ள இவர், இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதித் தலைவராவார். தற்போது கல்முனை கார்மேல் பத்திமா கல்லூரியில்



உயிரியல் ஆசிரியராக கடமையாற்றுகின்றார்.

தற்போது தேசிய மக்கள் சக்தியின் கல்முனை தொகுதி அமைப்பாளராகவும் அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினராகவும் உள்ளார்.

# தேசிய மக்கள் சக்தி இளங்குமரனின் கூற்று கோமாளித்தனமானது!

## பெரமுனவின் யாழ். அமைப்பாளர் கீதநாத்

யாழ். மாவட்டத்தில் இருந்து புதிதாக தெரிவு செய்யப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனின் சலுகை தொடர்பான கூற்று கோமாளித்தனமானது.

இவ்வாறு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர் கீதநாத் காசிலிங்கம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான எந்த சலுகைகளையும் பெற்றுக் கொள்ளப் போவதில்லை என்ற நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனின் கருத்து தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இந்தக் குற்றசாட்டை முன்வைத்துள்ளார்.

மேலும் தெரிவித்துள்ள கீதநாத், இந்த கூற்று கோமாளித்தனமான ஒன்றாக இருக்கிறது. குறித்த சலுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் அரசால் வழங்கப்படுகின்றமை மக்களுக்கு சேவை செய்வதற்கான நோக்கத்துடனேயே.

இந்த சலுகைகளைப் பெறாமல் தவிர்ப்பது எந்த வகையிலும், நாட்டின் பொருளாதாரத்தை அல்லது வருமானத்தை உயர்த்தப் போவதில்லை.

ஆகவே இந்த சலுகைகளையும் கொடுப்பனவுகளையும் பயன்படுத்தி மக்களுக்கு நீங்கள் சேவை செய்யுங்கள். இந்த சலுகைகளை பெற்றுக் கொள்வதும் தவிர்ப்பதும் உங்கள் விருப்பமே. என்றாலும், இந்த முறை யாழ். கிளிநொச்சி தேர்தல் மாவட்ட மக்கள் உங்கள் மீதுள்ள நம்பிக்கையால் உங்களை நாடாளுமன்ற உறுப்பினராக தேர்வு செய்துள்ளார்கள். அந்தப் பொறுப்பை உணர்ந்து மக்களின் பிரச்சினைகள் மற்றும் தேவைகளை கண்டறிந்து அவற்றுக்கான தீர்வை வழங்குவதையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனின் இதுபோன்ற பேச்சுகளால் மக்களின் வயிறு நிரம்பப் போவதில்லை. மக்களின் வரிப்பணத்தைக் கொண்டு சலுகைகள் வழங்கப்படுவதன் நோக்கம் அதன்மூலம் மக்களுக்கு செறிவான சேவையை மக்களுக்கு வழங்க வேண்டும் என்பதற்காகவே.

எனவே இவ்வாறான கேலிக்கூத்தான கதைகளைப் பேசுவதை விடுத்து மக்கள் சேவையில், குறிப்பாக இதுவரையிலும் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்துங்கள்.- என்றார்.

# அனைவரையும் அரவணைத்து சிறந்த கட்டமைப்பை ஏற்படுத்துவேன்!

## கல்முனை வெற்றி விழாவில் கோடீஸ்வரன் உரை

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் அனைவரையும் அரவணைத்து புதுப் பொலிவுடன் பரிணமிக்கும் சிறந்த கட்டமைப்பை ஏற்படுத்துவேன். மேலும் ஏழு அம்ச கோரிக்கையின் அடிப்படையில் எனது எதிர்கால செயற்பாடுகள் அமையும்.

இவ்வாறு அம்பாறை மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே. கோடீஸ்வரன் தெரிவித்தார்.

கல்முனையில் அவருக்கு அளிக்கப்பட்ட வெற்றி விழா வரவேற்பு நிகழ்வில் உரையாற்றிய பொழுது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.சிவலிங்கம் தலைமையில் மேற்படி நிகழ்வு இன்று (18) திங்கட்கிழமை காலை நடைபெற்றது.

பெருந்திரளான கல்முனை தமிழ் மக்கள் கூடிய அந்த நிகழ்வில், இரண்டாம் தடவையாக நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்கவிருக்கின்ற ஏ.கே.கோடீஸ்வரன் மேலும் தெரிவிக்கையில்,

இம்முறை அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் தமிழர்களின் இருப்பையும் அடையாளத்தையும் பாதுகாத்து இருக்கின்றீர்கள். எனது தமிழரசுக் கட்சியையும் என்னையும் வெல்ல வைத்து இருக்கிறீர்கள். அந்த வகையில் முதற்கண் அனைத்து தமிழ் மக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

அம்பாறை மாவட்டத்தில் புதுப் பொலிவுடன் ஒரு சிறந்த கட்டமைப்பை ஏற்படுத்த இருக்கின்றோம். அதற்கு அனைத்துத் தமிழ் மக்களையும் அனைத்து தமிழ்க் கிராமங்களையும் இணைத்து ஒன்று சேர்த்து இந்த கட்டமைப்பை உருவாக்க இருக்கிறோம்.

அதன் படி மூன்று மாதங்களுக்கு ஒரு முறை உங்கள் பிரதேசங்களுக்கு வந்து மக்களுடன் பேசி இருக்கின்ற பிரச்சினைகளை அடையாளம் கண்டு தீர்ப்பதற்கான வழிவகைகளை திட்டமிட்டு கொண்டிருக்கின்றோம்.





மக்களது வாழ்வியல் பொருளாதாரம் கல்வி கலாச்சாரம் என்பவற்றை மையப்படுத்தி இந்த சிறந்த கட்டமைப்பு ஏற்படுத்தப்பட இருக்கின்றது .

நாங்கள் அமையப் போகும் மத்திய ஆளும் அரசாங்கத்துடன் பேசிச் சிறந்த பேச்சுவார்த்தைகளை நடத்தி மக்களுக்கு செய்ய வேண்டிய அனைத்து பணிகளையும் எதிர்காலத்தில் செய்ய இருக்கின்றோம். உங்களுடன் இணைந்து தான் எந்த முடிவும் எடுக்கப்படும்.

நான் ஏழு அம்ச கோரிக்கையை மையப்படுத்தி தேர்தல் கேட்டவன். அந்த ஏழு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி எனது எதிர்கால செயற்றிட்டங்கள் அமைய இருக்கின்றன.

எமது கல்முனை வடக்கு பிரதேச செயலகம் பிரதேச சபைகள் புதிய வலயங்கள் மற்றும் இயற்கை வளம் சுரண்டல் போன்ற 7 அம்ச கோரிக்கையை மையப்படுத்தி அது முன்னெடுத்து செல்லப்படும்.

இனி அனைவரையும் அரவணைத்து ஆலோசனை பெற்று எமது எதிர்காலத் திட்டங்கள் தொடரும். அதன்படியே எந்த முடிவும் எடுக்கப்படும் என்பதனை இங்கு உறுதியாக கூறி வைக்க விரும்புகின்றேன்.- என்றார்.

நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் வி.குலசேகரம் உள்ளிட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998







# அக்கராயனில் மரக்கன்று வழங்கிய தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்!



தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டுக் கிளிநொச்சியில் அக்க ராயன் கரித்தாஸ் குடியிருப்புக்கு மரக் கன்றுகளை வழங்கியுள்ளது.

வடக்கு மாகாணசபை 2014 ஆம் ஆண்டு கார்த்திகை மாதத்தை வட மாகாண மரநடுகை மாதமாகப் பிர கடனப்படுத்தியிருந்தது. இதனை ஆண்டுதோறும் தவறாது கடைப்பிடித்து வரும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இந்தக் காலப் பகுதியில் பொது மக்க ளுக்கும், பொது அமைப்புகளுக்கும் மரக்கன்றுகளை இலவசமாக வழங்கி வருகிறது. மரக்கன்றுகளை நடுகை செய்தும் வருகிறது.

இதன் தொடர்ச்சியாகவே நேற்று ஞாயிற்றுக்கிழமை (17) அக்கராயனில் கரித்தாஸ் குடியிருப்பு மக்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அனைத்துக் குடும்பங்களுக்கும் மா மரக் கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் இணைப் பாளர் உ.நிறோஜன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், சூழல் பாதுகாப்பு அணி யின் துணைச் செயலாளர் த. யுகேஸ் ஆகியோர் கலந்து கொண்டு மரக் கன்றுகளை வழங்கினர்.











# மணிப்பூரில் மீண்டும் பதற்றம் முதல்வர் வீடு மீது தாக்குதல்

மணிப்பூரில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட 6 பேரின் உடல்களை கண்டெடுக்கப்பட்ட சில மணி நேரத்தில் ஏற்பட்ட கலவரத்தைத் தொடர்ந்து போராட்டக்காரர்கள் முதல்வர், எம்.எல்.ஏக்களின் வீடுகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

போராட்டக்காரர்கள், மாநில முதல்வர் பிரேன் சிங்கின் மருமகன் உட்பட ஆறு எம்.எல்.ஏக்களின் மூன்று பேரின் வீடுகளில் சூறையாடினர், சொத்துக்களை தீ வைத்து சேதப்படுத்தினர்.

இம்பால் நகரின் பல பகுதிகளில் போராட்டக்காரர்களை கண்ணீர் புகை குண்டு வீசி கலைத்ததாக பொலிஸார் தெரிவித்தனர். போரட்டத்தைத் தடுக்கும் விதமாக ஐந்து மாவட்டங்களில் அரசு காலவரையற்ற ஊரடங்கை அமுல்படுத்தியுள்ளது. சில இடங்களில் இணையத் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தின் தலைமைச் செயலர் வினீத் ஜோஷி, பாதிக்கப்பட்டுள்ள இம்பால் மேற்கு மற்றும் கிழக்கு, பிஷ்னுபூர், தவுபாங், கக்சிங், காங்போக்பி மற்றும் சுரசந்த்பூர் ஆகிய மாவட்டங்களுக்கு இரண்டு நாள்களுக்கு இணையம் மற்றும் மொபைல் டேட்டா சேவைகளை நிறுத்தி வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.


மணிப்பூரில் ஆயுதம் தாங்கிய குகி தீவிரவாதிகளால் கடத்தப்பட்டதாக கூறப்படும் ஆறு பேரில் ஒரு பெண் மற்றும் 2 குழந்தைகளின் உடல்கள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு, ஜிரிபாம் மாவட்டத்தில் உள்ள போரோபெக்ராவில் இருந்து 16 கி.மீ. தொலைவில் கண்டெடுக்கப்பட்டன. மேலும் 3 பேரின் உடல்கள் கடந்த சனிக்கிழமை பிற்பகல் கண்டெடுக்கப்பட்டன. அழுகிய நிலையில் காணப்பட்ட உடல்கள், பிரேதப் பரிசோதனைக்காக எஸ்.எம்.சி.எச். மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மணிப்பூரில் மீண்டும் போராட்ட பதற்றம் வெடித்தது. இந்நிலையில் அமைச்சர்கள் சபம் ரஞ்சன், எல். சுசிந்த்ரோ சிங் மற்றும் ஒய்.ஹேம்சந்த் ஆகியோரின் வீடுகளை போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனால் இம்பால் மேற்கு மற்றும் கிழக்கு, பிஷ்னுபூர், தவுபால் மற்றும் கக்சிங் ஆகிய ஐந்து மாவட்டங்களில் காலவரையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### ட்ரம்ப் வெற்றியால் சீனாவுக்கு நெருக்கடி:

# இந்தியப் பங்குச் சந்தை மீதான மதிப்பீடு உயரும் வாய்ப்பு




கடந்த சில வாரங்களாக இந்தியப் பங்குச் சந்தையில் சரிவு காணப்பட்டு வருகிறது. 1.2 லட்சம் கோடி ரூபா மதிப்பில் அந்நிய முதலீட்டாளர்கள் தங்கள் பங்குகளை விற்று வெளியேறியுள்ளனர்.

அதேசமயம், சீன அரசு, அந்நாட்டு பொருளாதாரத்தை ஊக்குவிக்க ஊக்கத் திட்டங்களை அறிவித்த நிலையில், சீனப் பங்குச் சந்தை ஏற்றத்தைக் கண்டு வந்தது.

இந்நிலையில், இந்திய பங்குச் சந்தை மீதான மதிப்பீட்டை சர்வதேச பங்குச் சந்தை தரகு நிறுவனமான சி.எல்.எஸ்.ஏ. குறைத்திருந்தது.

ஆனால், தற்போது அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிலையில், சீனப் பங்குச் சந்தை மீதான மதிப்பீட்டை சி.எல்.எஸ்.ஏ. நிறுவனம் குறைக்க முடிவு செய்துள்ளது.

இது குறித்து அந்நிறுவனம் கூறுகையில்,

“ட்ரம்ப் மீண்டும் ஜனாதிபதியாகியுள்ள நிலையில் சீனா – அமெரிக்கா வர்த்தகத்தில் நெருக்கடி ஏற்படும் சூழல் உருவாகி இருக்கிறது. இதனால், சீனாவின் பொருளாதாரம் பாதிக்கப்படலாம். இரண்டாவது, சமீபத்தில் சீனா அறிவித்த ஊக்கத்திட்டங்கள் எதிர்பார்த்த வளர்ச்சியை ஏற்படுத்த போதுமானதாக இல்லை. இதனால், பங்குச் சந்தை முதலீட்டாளர் சீனாவிலிருந்து வெளியேறும் சூழல் உருவாகி உள்ளது.

அதுவே இந்தியாவை எடுத்துக் கொண்டால், சீனாவுடன் ஒப்பிடுகையில் அமெரிக்கா உடனான இந்தியாவுக்கான மிகக் குறைவு. வர்த்தக ரீதியாக இந்தியா பாதுகாப்பான நிலையில் உள்ளது. இதனால், முதலீட்டாளர் இந்தியப் பங்குச் சந்தையை நோக்கி திரும்பு சூழல் உருவாகுகிறது.” என்று குறிப்பிட்டுள்ளது.





# உக்ரைன் மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதல்

கடந்த 3 மாதங்களுக்குப் பின்னர் உக்ரைன் மீது ரஷ்யா பாரிய ஏவுகணை தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று காலை உக்ரைனின் தலைநகர் உள்ளிட்ட பல பகுதிகளில் குண்டு வெடிப்பு சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

தற்போது உக்ரைனில் குளிர்கால பருவநிலை ஆரம்பித்துள்ள நிலையில், மின்சார வசதிகளை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் உக்ரைனில் பல பகுதிகளில் மின்சார இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

120 ஏவுகணைகள் மற்றும் 90 இற்கும் அதிகமான ஆளில்லா விமானத் தாக்குதல்களால் உக்ரைன் மேற்கு பகுதியில் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.









# தென்கொரியா எல்லையில் பதற்றம்: வடகொரியா விநோதமான தாக்குதல்







வடகொரியா தென்கொரியாவைக் குறிவைத்து மிக வினோதமான தாக்குதலை முன்னெடுத்துள்ளது.

இராணுவம், ஏவுகணை போன்றவை வடகொரியா நடத்தும் இந்த உளவியல் தாக்குதலில் தென்கொரிய எல்லையோர கிராமம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையே பல காலமாகவே மோதல் போக்கு நிலவி வருகிறது.

இதனால் இரு கொரிய நாடுகளின் எல்லைகள் பதற்றமாக இருக்கும். இதற்கிடையே தென்கொரியாவில் வினோதமான தாக்குதலை வடகொரியா நடத்தி இருக்கிறது.

தென் கொரியா எல்லையில் அமானுஷ்யமான, வினோதமான ஒலிகளை இப்போது வடகொரியா ஒலிபரப்பி வருகிறது. இது தென்கொரியக் கிராம மக்களின் அன்றாட வாழ்க்கையைச் சீர்குலைக்கும் வகையில் இருப்பதாகப் புகார்கள் எழுந்துள்ளன.

எல்லையில் உள்ள டாங்சன் என்ற கிராமத்தைக் குறிவைத்துத் தான் வடகொரியா இதைச் செய்து வருகிறது. அங்கு கார் விபத்துகள் ஏற்படுவது போன்ற சத்தம், பேய் அலறுவது என்று தொடர்ச்சியாக வினோதமான சத்தங்களை ஒலிப்பெருக்கியில் போட்டு வடகொரியா ஒலிபரப்புகின்றது.

இது அங்குள்ள கிராம மக்களைக் கடுமையாகப் பாதிக்கிறது. அப்பகுதி மக்கள் மேலும் கூறுகையில், “பல மாதங்களாகவே தொடர்ந்து இதைச் செய்து வருகிறார்கள். முன்பாவது மனித ஒலிகளைத் தான் எழுப்பினார்கள். அதைச் சற்று சமாளிக்கும் வகையில் இருந்ததது.

ஆனால், இப்போது பேய் சத்தம், உலோகங்கள் மோதும் சத்தம் என எல்லை மீறிப் போகிறார்கள்” – என்றார்.

பக்கங்கள் 02

கனடா முரசு

திங்கட்கிழமை 18/11/2024

## காதல் வலையில் சிக்கி பணத்தை இழந்த பெண்

கனடாவின் பிராம்டன் பகுதியில் பெண் ஒருவர் காதல் வலையில் சிக்கி பெருந்தொகை பணத்தை இழந்து உள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

சுமார் இரண்டு லட்சம் டொலர்கள் வரையில் அந்தப் 02▶





# டெய்லர் சிப்ட்டின் இசை நிகழ்ச்சி டிக்கெட் மோசடி குறித்து எச்சரிக்கை

**கனடாவில் இசை நிகழ்ச்சி மோசடி தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. உலகின் பிரபல இசை கலைஞரான டெய்லர் சிப்ட்டின் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.**

**கனடாவின் சில இடங்களில் இந்த இசை நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.**

**இந்த இசை நிகழ்ச்சிகளில் பார்வையிடுவதற்கான டிக்கெட் விற்பனை செய்வதாகக் கூறி பலர் மக்களை ஏமாற்றி வருகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.**

சமூக ஊடகங்களின் வாயிலாக இந்த மோசடிகள் இடம் பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. அண்மையில் டொரன்டோவை சேர்ந்த பெண் ஒருவர் இவ்வாறு மோசடியில் சிக்கியுள்ளார்.

தனது 7 வயதான மகளுக்கு பிறந்த நாள் பரிசாக இந்த டிக்கெட்டுகளை வழங்குவதற்கு அந்தப் பெண் திட்டமிட்டு இருந்தார்.

சமூக ஊடகத்தில் டிக்கெட் கொள்வனவிற்காக 1800 டாலர்களை குறித்த பெண் செலவிட்ட போதிலும் டிக்கெட்டுகள் கிடைக்கவில்லை.

இந்த இசை நிகழ்ச்சி பிரபலமானது என்ற காரணத்தினால் பலரும் டிக்கெட்டுகளை கொள்வனவு செய்வதற்காக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மக்களின் இந்த இசை ஆர்வத்தை பயன்படுத்தி பல்வேறு மோசடிகாரர்கள் பணம் பறிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர் எனவும் இது குறித்து மக்கள் மிகுந்த விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பெண்ணுக்கும் அவரது மகளுக்கும் தற்பொழுது டிக்கெட்டுகள் கிடைக்க பெற்றுள்ளன.

மேற்படி பெண் ஏமாற்றப்பட்டமை தொடர்பில் கேள்விப்பட்ட இசை நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் இந்த டிக்கெட்டுகளை வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தென் அமெரிக்க நாடுகளுக்கு விஜயம்



கனடிய பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தென் அமெரிக்க நாடுகளுக்கான விஜயத்தை ஆரம்பித்துள்ளார்.

பிரேஸில் நடைபெறவுள்ள ஜீ20 மாநாட்டில் பங்கேற்பதற்காக அவர் இவ்வாறு விஜயம் செய்துள்ளார்.

முதலில் அவர் பேருவிற்கு விஜயம் செய்வார் என தெரிவிக்கப்படுகின்றது.

பிரேஸிலின் ரியோ டி ஜெனய்ரோவில் ஜீ20 மாநாடு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகில் நிலவி வரும் பட்டினி நிலைமை முதல் டிஜிட்டல் நாணயங்கள் வரையில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் இந்த மாநாட்டில் கலந்துரையாடப்பட உள்ளன.

அமெரிக்காவில் புதிய ஜனாதிபதியாக டொனால்ட் ட்ராம்ப் தெரிவு செய்யப்பட்டு இரண்டு வார இடைவெளியில் இந்த மாநாடு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் இருந்து பிரித்தானியாவிற்கு போதைப் பொருள் கடத்தியவர் கைது

கனடாவின் பியர்சன் சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக பிரித்தானியாவிற்கு சுமார் 40 கிலோ கிராம் எடையுடைய கஞ்சா போதை பொருளை கடத்த முயற்சித்த நபர் ஒருவரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர். 21 வயதான சுபெய்ர் மஹிடா என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கனடிய எல்லை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட சோதனையின் போது பெருந்தொகை கஞ்சா போதை பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த போதைப் பொருளின் சந்தை பெறுமதி சுமார் 120 ஆயிரம் டொலர்கள் என தெரிவிக்கப்படுகிறது. மேற்படி நபருக்கு எதிராக வழக்கு தொடரப்பட உள்ளது.




பின்னர் அந்த நபருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் 28ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அதிகபட்சமாக 14 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

# குழந்தை பெற்றுக் கொள்ளவே இந்திய பெண்கள் வருகிறார்கள்

## கனடா இளைஞன் சர்ச்சை கருத்து

இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையே மோதல் போக்கே நிலவி வரும் நிலையில், கனடா நாட்டை சேர்ந்த ஒருவர் கூறியுள்ள கருத்து மீண்டும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியப் பெண்கள் குழந்தை பெற்றுக் கொள்ள மட்டும் கனடா வருகின்றனர் எனவும் இதனால் கனடா நாட்டு மக்களின் வரிப்பணம் வீணாகின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தியா- கனடா இடையே கடந்த சில காலமாகவே மோசமான உறவே நிலவி வருகிறது. கனடா நாட்டில் காலிஸ்தான் பயங்கரவாதி ஹர்தீப் சிங் கொல்லப்பட்ட நிலையில், அதில் இந்தியாவுக்குத் தொடர்பு இருப்பதாகக் கனடா பிரதமர் ட்ரூடோ ஆதாரமின்றி கூறியதே மோதலுக்குக் காரணமாகும்.

அதன் பிறகு இரு தரப்பிற்கும் மோதல் இருந்த நிலையில், தூதர்களைக் கூட இந்தியா திரும்பப் பெற்றுக் கொண்டது.

இந்த நிலையில், கனடாவை சேர்ந்த சாட் ஈரோஸ் என்பவர் இந்தியப் பெண்கள் குறித்து சில சர்ச்சை





கருத்துக்களைக் கூறி இருக்கிறார். அதாவது கருவுற்று இருக்கும் இந்தியப் பெண்கள் பிரசவத்திற்காகக் கனடாவுக்குச் செல்கின்றனர் என்று அவர் கூறியிருக்கிறார்.

கனடாவில் குழந்தை பெற்றுக் கொள்ளும் அவர்கள், குடியுரிமைபெற இதைப் பயன்படுத்திக் கொள்கின்றனர் என்றும் அதன் பிறகு குடும்பத்தினரை மொத்தமாக அழைத்து வருகின்றனர் எனவும் ஈரோஸ் கூறியிருக்கிறார்..

கனடாவில் உள்ள பிரசவ வார்டுகள் கனடா வந்த இந்தியப் பெண்களால் நிரம்பி இருப்பதாக ஒரு செவிலியர் தனது உறவினரிடம் கூறியுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கனடாவில் அனைவருக்கும் சமமான சிகிச்சை தரப்பட வேண்டும் என்றாலும் இந்தியப் பெண்கள் அதிக இடங்களை எடுத்துக் கொள்வது போல இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## காதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெண் இழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

சமூக ஊடகம் வழியாக தொடர்பு கொண்ட நபர் ஒருவரே இவ்வாறு மோசடியில் ஈடுபட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

அனைத்து விடயங்களையும் தம்முடன் பரிமாறிக்கொண்டு நம்பிக்கையை ஏற்படுத்தி, தம்மை ஏமாற்றி பணம் பறித்துள்ளார் என குறித்த பெண் தெரிவிக்கின்றார்.

தனது மனைவி புற்றுநோயினால் உயிரிழந்து விட்டதாகவும் இரண்டு மகன்களுக்கும் சத்திர சிகிச்சை செய்



வதற்காக பணம் தேவை எனக்கூறி, பணம் பெற்றுக் கொண்டுள்ளார் எனவும் அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

கடனாக இந்த பணத்தை பெற்றுக் கொள்வதாகவும் தனக்கு பணம் கிடைக்கப்பெற்றதும் அவற்றை மீள வழங்குவதாகவும் அந்த நபர் தெரிவித்துள்ளார்.

எனினும் இறுதியில் இவ்வாறு தம்மிடம் பணம் பெற்றுக் கொண்ட நபர் தம்மை ஏமாற்றி பணம் பெற்றுக் கொண்டது பின்னர் தெரியவந்தது என அந்தப் பெண் தெரிவித்துள்ளார்.

கனடாவில் இவ்வாறு சமூக ஊடகங்கள் வாயிலாக காதல் வலையில் சிக்கவைத்து பணம் பறிக்கும் சம்பவங்கள் அதிக அளவில் இடம் பெறுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பெண் தனது வாழ்நாள் சேமிப்பு தொகையான 230000 டொலர்களை இவ்வாறு அந்த நபரிடம் இழந்துள்ளார்.

கடந்த ஆண்டு இவ்வாறான மோசடிகளில் கனடியர்கள் 52 மில்லியன் டொலர் பணத்தை இழந்துள்ளனர்.